**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.498 /2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/ Pw2 |
| Name | : Selvam |
| Father/Husband's Name | : Ramanjal |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக இருந்து 31.05.2025ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். நான் கடந்த 22.10.2023 அன்று காலை 8.30 மணியளவில் செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, எனக்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், நான் மற்றும் என்னுடன் சுரேஷ்குமார் தலைமை காவலர் 212, நரேந்திரன் காவலர் 259 ஆகியோர்களுடன் ஆத்தூர் தென்பாதி கிராமம் அருகே காலை 9.00 மணியளவில் ரோந்து பணியிலிருந்தபோது, அருகிருந்த ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட, ஆஜர் எதிரியை விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால், அவரை சோதனை செய்ய போவதாக சொல்லி மேற்படி, எதிரியிடம் நான் உன்னை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், அவரை சோதனை செய்த போது, அவர் பாக்கெட்டில் 200 கிராம் கஞ்சா வைத்திருந்தார். பொது மக்கள் சாட்சிகள் யாரும் அங்கு இல்லாததால், அதை நான் மேற்சொன்ன சுரேஷ்குமார் மற்றும் நரேந்திரன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அதன் பிறகு

எதிரியை கைது செய்து, கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் சேர்ந்து, எதிரி மீது நிலைய குற்ற எண்.487/2023 8(c),20(b)(ii)(A) NDPS act ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து, இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 200 கிராம் கஞ்சா **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து, மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பட்டியல் சாட்சிகளை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். காலை 9 மணியளவில் எதிரியை கைது செய்தோம். சுமார் 200 கிராம் கஞ்சாவை கைப்பற்றினோம். நான் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S. Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu